# அண்ணா நகர் - மதுரவாயல் - விருகம்பாக்கம் தொகுதிகளில் நடை பயிற்சியின்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் தீவிர வாக்கு சேகரிப்பு!

## சென்ற வழியெல்லாம் ஆரவாரத்துடன் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு!




கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.4.2026) சென்னை, அண்ணாநகர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அண்ணாநகர் தொகுதி கழக வேட்பாளர் நே .சிற்றரசுவை ஆதரித்து நடந்து சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.4.2026) சென்னை, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மதுரவாயல் தொகுதி கழக வேட்பாளர் க.கணபதியை ஆதரித்து நடந்து சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.4.2026) சென்னை, விருகம்பாக்கம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் விருகம்பாக்கம் தொகுதி கழக வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜாவை ஆதரித்து நடந்து சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.4.2026) சென்னை, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மதுரவாயல் தொகுதி கழக வேட்பாளர் க.கணபதியை ஆதரித்து நடந்து சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி ஆகியோர் உள்ளனர்.

## முதல்வர் ஸ்டாலினை மிரட்டவோ அடிபணிய வைக்கவோ பா.ஜ.க.வினால் முடியாது!

## தமிழ்நாட்டை விற்கத் துடிக்கும் மோடி, அமித்ஷா!

# தில்லியில் இராணுவ வீரனாக இருந்து தமிழ்நாட்டை காப்பேன்!



## துறையூரில் ராகுல்காந்தி நெகிழ்ச்சி உரை!

**திருச்சி , ஏப். 21 -**

**“தமிழகத்தின் கலாச்சாரம், மொழி மற்றும் சமூகநீதி மீது பா.ஜ.க. தொடுக்கும் தாக்குதலைத் தடுக்க, தில்லியில் உங்கள் ராணுவ வீரனாக இருந்து தமிழகத்தைக் காப்பேன்” என்று காங்கிரஸ் தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி உருக்கமாகப் பேசினார்.**

திருச்சி மாவட்டம் துறையூரில் சனிக் கிழமை நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் ராகுல் காந்தி உரையாற்றினார்.

**தமிழகத்தின் ஆன்மாவைப் பறிக்கச் சதி!**

பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி, “பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் தமிழர்களின் தொன்மையான மொழி மற்றும் கலாச்சாரத்தை வெறுக் கின்றன. தமிழக முதல்வர் ஸ்டாலினை மிரட்டவோ, அடிபணிய வைக்கவோ முடியாது என்பது பா.ஜ.க.வுக்கு நன்றாகத் தெரியும். எனவே, ஊழல் புகார்களில் சிக்கியுள்ள அ.தி.மு.க. அமைச்சர்களை ஈ.டி., சி.பி.ஐ. அமைப்புகளை வைத்து மிரட்டித் தங்களுக்கு அடிபணிய வைத்துள்ளனர்.

இன்றைய அ.தி.மு.க. என்பது பா.ஜ.க.வின் முக மூடியாகவும், பொம்மை கட்சியாகவும் மாறி விட்டது.

டிரம்ப்பிடம் மோடி சரணடைந்து இந்தியாவை விற்றது போல, தமிழகத்தை விற்கும் ஒரு பொம்மை முதல்வரை இங்கு அமர்த்த மோடியும் அமித் ஷாவும் திட்டமிடுகிறார்கள்” என்று சாடினார்.

**தொகுதி மறுசீரமைப்பு ஒரு துரோகம்!**

“மகளிர் மசோதா என்ற போர்வையில் தென்னிந்திய மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் தொகுதி மறு சீரமைப்பைக் கொண்டுவர பா.ஜ.க. முயன்றது. தமிழகத்தின் சமூகநீதிக் கொள்கை அவர்களுக்கு மிகப்பெரிய எரிச்சலைத் தருகிறது.

சமத்துவத்தைப் போதிக்கும் தமிழகத்தின் சிந்தனையைச் சிதைப்பதே அவர்களின் நோக்கம். ஆனால், அவர்களின் இந்தச் சூழ்ச்சிகளை முறியடித்துத் தமிழகத்தின் உரிமைகளை மீட்டெடுப்போம். தமிழகத்தின் சமூக நீதி கொள்கையை நாடு முழுவதும் விரிவுபடுத்த வேண்டும்” என்று அவர் வலியுறுத்தினார்.

குடும்ப உறவும் பாசமும் “தமிழக மக்களுடனான எனது உறவு அரசியல் சார்ந்தது அல்ல; இது சம மரியாதை, அன்பு மற்றும் ஈர்ப்பால் உருவானது. எனது பாட்டி இந்திரா காந்தி, தந்தை ராஜீவ் காந்தி காலத்திலிருந்து தொடர்ந்து வரும் இந்த உறவு என்றும் நிலைத்திருக்கும்.

தமிழகத்திற்குத் தேவையான உரிமைகளைப் பெற்றுத் தர தில்லியில் நான் உங்களுக்காகப் போராடுவேன்” என்று அவர் நெகிழ்ச்சியுடன் பேசினார்.

முன்னதாக, காங்கிரஸ் வேட்பாளர் லெனின் பிரசாத் வழங்கிய சீரக சம்பா அரிசியைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட ராகுல் காந்தி, “இந்த அரிசியை வைத்துச் சமைப்பேன்” என்று மகிழ்ச்சியுடன் தெரி வித்தார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என். நேரு, காங்கிரஸ் மூத்த தலைவர் கே.வி. தங்கபாலு மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள், நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.